# DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of criminal procedure)

## IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE

CC.No. 328/2023

Deposition of Witness for P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | : மைதிலி | Caste | : |
| Father's Name | : பழனி | Calling | : |
| Village | : ஈரோடு | Religion | : |
| Taluk | : ஈரோடு | Age | :46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **01.03.2024**

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தெற்கு போக்குவரத்து காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 05.02.20217 ந்தேதி நான் கருங்கால் பளையம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிகிறேன். நான் கருங்கல்பாளையம் காவல்நிலையத்தில் பணியில் இருந்தபோது 16.00 மணிக்கு பிரவீன் த/பெ ஜெயராம் நாடார் மேடு ஈரோடு என்பவர் நிலையம் ஆஜர் ஆகி கருங்கல்பாளையம் பச்சயப்பா வீதியில் ஒருபெண்ணை விபச்சாரத்தில் ஈடுபடுத்துவதாக எழுத்து மூலமான புகாரினை கொடுத்தார். மேற்படி புகாரினை பெற்று உதவி ஆய்வாளர் கோமதி கருங்கல்பாளையம் நிலைய குற்ற எண்.61/2017 ஆக வழக்கு பதிவு செய்தார். பின்னர் சம்பவ இடத்திற்கு காவல் ஆய்வாளாருடன் நானும், உதவி ஆய்வாளார் கோமதி தலைமை காவலார் வடிவேல் மற்றும் தலைமை காவலார் மெய்யப்பன் ஆகியோர் சென்றோம்.

2. சம்பவ இடத்தில் இருந்த மூன்று நபர்களின் பெயர்களை காவல் ஆய்வாளார் எங்களின் முன்னிலையில் விசாரித்தார். அவர்கள் தங்களது பெயர் சாமுண்டீஸ்வரி, முருகன், ஜாபர் என சொன்னார்கள். காவல் உதவி ஆய்வாளார் அவர்கள் சாமுண்டீஸ்வரியை விசாரித்த போது ஒரு பெண்ணை விபச்சாரத்தில் ஈடுபடுத்தி வருவதாகவும், அந்த பெண் அங்கு தான் இருப்பதாகவும் சொன்னார்கள். அந்த பெண்ணை வெளியே வரச்சொல்லி காவல் உதவி ஆய்வாளார்அந்தபெண்ணை விசாரித்தபோது

பார்வதி (40), க/பெ முருகேசன், ஆரன்புதுார் ஈரோடு என சொன்னார். மேலும் பார்வதி சாயப்பட்டறையில் வேலை வாங்கி தருவதாக சொல்லி தற்போது எதிரிகள் தன்னை விபச்சாரத்தில் ஈடுபடுத்துவதாக சொன்னார்கள். அதே தேதியில் 17.15 மணிக்கு காரணம் கூறி எதிரிகளை கைது செய்து 17.45 மணிக்கு கருங்கல்பாளையம் காவல்நிலையத்திற்கு எதிரிகளை அழைத்து வந்தோம். காவல் ஆய்வாளார் விசாரித்தபோது நான் நடந்தவற்றை சொன்னேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. காவல்நிலையத்திற்கு வரும்போதே புகார்தாரர் புகாரை எழுதிக்கொண்டு வந்தாரா என்றால் எழுதிக்கொண்டு வந்தார். முதல் தகவல்அறிக்கை பதிவு செய்தபின்னர் காவல் ஆய்வாளார் எப்போது காவல்நியைத்திற்கு வந்தார் என்றால், காவல் ஆய்வாளார் காவல்நிலையத்தில் தான் இருந்தார். என்னென்ன வாகனத்தில் சம்பவ இடத்திற்கு சென்றோம் என்றால், நானும், காவல் உதவி ஆய்வாளார் கோமதியும், இருசக்கர வாகனத்தில் சென்றோம். காவல் ஆய்வாளார், புகார்தாரர், தலைமை காவலாளர்கள் வடிவேல் மற்றும் மெய்யப்பன் ஆகியோர் ஜீப்பில் வந்தார்கள். அனைவரும் சீருடையில் சென்றோமா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. எதிரிகளை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள். பார்வதியை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள்.

2. என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள். அப்போது யார் சென்னதை பதிவு செய்தார்கள் என்றால் தற்போது ஞாபகம் இல்லை. அனைத்து சாட்சிகளையும் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்து லேப்டாப்பில் பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு வந்து தான் பிரிண்ட் எடுத்தார்கள். நான் சொன்ன நேரத்தில், சென்ன விதத்தில் காவல்நிலையத்தில் யாரும் புகார் அளிக்கவில்லையென்றாலும், நான் சொன்னது போல் உதவி ஆய்வாளார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லையென்றாலும், நான் சொல்வது போல் காவல் ஆய்வாளருடன் சம்பவ இடம் செல்லவில்லையென்றாலும், எனது முன்னிலையில் எதிரிகளையும், சாட்சிகளையும் விசாரித்து வாக்குமூலங்களை லேப்டாப்பில் பதிவு செய்யவில்லையென்றாலும், நான் சொன்னது போல் ஆய்வாளார் எதிரிகளை கைது செய்யவில்லையென்றாலும், சரியல்ல.

3. புகாரும், முதல்தகவல் அறிக்கையும் காவல்நிலையத்தில் வைத்து பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. ஏற்கனவே தயாரிக்கப்பட்ட புகாரில் காவல் ஆய்வாளாரின் வேண்டு கோளுக்கு இணங்க புகாரினை அனுசரித்து பொய்யாக சாட்சியம்

WEB PAGE

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்குகளுக்கும் சம்பந்தம் இல்லையென்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை**:இல்லை

WEB PAGE